**நகராட்சி அலுவலகம்,**

**சாத்தூர்.**

**நாள்: 30.01.2024**

## <u>சாத்தூர் நகர்மன்றம் அவசரக் கூட்டம் அறிவிப்பு</u>

**<u>கூட்டம் எண். 23</u>**

**நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2053ம் வருடம் தை 17 ஆம் நாள் 2024ம் ஆண்டு ஜனவரி மாதம் 31.01.2024ம் தேதியன்று புதன்கிழமை காலை 11.30 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்றக் கூட்ட அரங்கில் வைத்து நகர்மன்றத் தலைவர் அவர்கள் தலைமையில் அவசரக்கூட்டம் நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்திற்கு நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

**நகர்மன்றத் தலைவர்**

**சாத்தூர் நகராட்சி.**

<u>பொருள் எண்.1</u>

சாத்தூர் நகராட்சியில் தை திங்கள் மறுநாள் காணும் பொங்கலை ஒட்டி நகராட்சி பகுதி மக்கள் மற்றும் நகராட்சி பகுதியை ஒட்டிய கிராம மக்கள் வைப்பாற்றில் காலம் காலமாக மணல் மேட்டு திருவிழா கொண்டாடப்படும். தலைமை நீரேற்று நிலைய பூங்காவில் ஒலி ஒளி மற்றும் அலங்கார விளக்குகள் பொறுத்தப்படுவது வழக்கம். தற்போது கடந்த மூன்று ஆண்டுகளாக கொரோனா தொற்று நோயினை முன்னிட்டு பொதுமக்கள் அதிக அளவில் கூடுவதை தவிர்க்கும் பொருட்டு நகர்பகுதியில் உள்ள 5 இடங்களில் உள்ள பூங்காக்களில் ஒலி ஒளி மற்றும் அலங்கார விளக்ககுகள் அமைத்து திருவிழாவினை சிறப்பாக கொண்டாட வழிவகை செய்யப்பட்டு வருகிறது. அதன்படி இந்தாண்டும் 5 இடங்களில் உள்ள பூங்காக்களில் ஒலி ஒளி மற்றும் அலங்கார விளக்ககுகள் அமைக்க ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.55,175/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

பணியின் அவசர அவசியம் கருதி மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 29/2024/எம்1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.379, நாள்:31.01.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.2</u>

சாத்தூர் நகராட்சி பொறியியல் பிரிவில் இருந்து குடிநீர் டேங்கர் லாரி TN 67B 7759 மற்றும் TN 67A 7796 மூலம் சுமார் 25 ஆண்டு காலமாக அரசு பயன்பாட்டில் உள்ள நகராட்சி பள்ளிகள், நகராட்சி அலுவலகம், பேருந்து நிலையம், மோட்டார் பழுது ஏற்படும் காலங்களில் பொது கழிப்பறைகள் சத்துணவு கூடங்கள் மற்றும் திருவிழா காலங்களில் பொது இடங்களில் குடிநீர் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டு வந்தது. தற்போது 2 வண்டிகளின் ஆயுட்காலம் முடிவடைவதால் தினசரி குடிநீர் வழங்கும் பொருட்டு புதிய வாகனம் வாங்கும் வரை தற்காலிகமாக தனியார் வாகனத்தின் மூலம் நகராட்சி மேல்நிலை நீர்தேக்க தொட்டியிலிருந்து குடிநீர் எடுத்து சப்ளை செய்யும் பொருட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 22/2024/எம்1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.380, நாள்:31.01.2024
தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.3</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.19731/2023/சிஎப்சி1 நாள்: 17.07.2023-ல் நகர்பகுதியில் 2023-2024-ம் ஆண்டு 15-வது நிதிக்குழு சுகாதார திட்டத்தின் கீழ் ரூ.120.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன் பொருட்டு அதற்கு உரிய திட்ட மதிப்பீடு தயார் செய்து நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.18486/2023/டிஓ1 நாள்: 12.10.2023-ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நகராட்சிக்கு சொந்தமான ஆடு அடி சாலை அருகில் உள்ள இடத்தினை அளவீடு செய்யப்பட்ட போது அப்பகுதியை சேர்ந்த வார்டு எண்.22-ல் உள்ள பொதுமக்கள் தங்கள் பகுதியானது சலவை தொழிலாளர்கள் கட்டுமான தொழிலாளர்கள் மற்றும் தீப்பெட்டி தொழிலாளர்கள் நிறைந்த பகுதிகளாகும். மேலும் இப்பகுதியானது குடிசை பகுதியாகும் (Slum Area) இப்பகுதி மக்கள் வசதிக்கும் வீடுகளில் தனி நபர் கழிப்பறைகள் எதுவும் இல்லை என்பதால் அருகில் உள்ள பொது கழிப்பறையினை பயன்படுத்தி வருவதாகவும் தெரிவித்தனர். அதனால் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு ஏதுவாக பொது கழிப்பறை அப்புறப்படுத்தும் பட்சத்தில் கழிப்பறை வசதிகள் இல்லாமல் திறந்தவெளி கழிப்பறை பயன்படுத்த நேரிடும் எனவும் அதன் பொருட்டு எதிர்ப்பு தெரிவித்து மாற்று இடத்தினை தேர்வு செய்து பணியினை மேற்கொள்ளுமாறு நகராட்சி அலுவலகத்திற்கு நேரில் வந்து 11.12.2023-ல் கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும் வட்டார மருத்துவ

அலுவலர் உப்பத்தூர் அவர்களின் 03.01.2024-ம் தேதிய கடிதத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தினை மாற்று இடமான குருலிங்காபுரத்தில் அமைத்து தரும் பட்சத்தில் பொதுமக்களுக்கு கூடுதல் பயன் அளிக்கும் என தெரிவித்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

அப்பகுதியை சேர்ந்த வார்டு எண்.22-ல் உள்ள பொதுமக்கள் சலவை தொழிலாளர்கள் கட்டுமான தொழிலாளர்கள் மற்றும் தீப்பெட்டி தொழிலாளர்கள் எதிர்ப்பு தெரிவித்தும். மேலும் வட்டார மருத்துவ அலுவலர் உப்பத்தூர் புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தினை குருலிங்காபுரத்தில் அமைத்து தரும் பட்சத்தில் பொதுமக்களுக்கு கூடுதல் பயன் அளிக்கும் என தெரிவித்துள்ளதால் அதன் பொருட்டு புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தினை குருலிங்காபுரத்தில் அமைக்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 573/2023/ எம்1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.381, நாள்:31.01.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.4</u>

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.117/4/2024 நாள்:10.01.2024 தைத்திருநாளை முன்னிட்டு தமிழர்களின் பண்பாடு மற்றும் கலாச்சாரத்தினை வெளிப்படுத்தும் பொருட்டு ஜனவரி 15 மற்றும் 16-ம் தேதிகளில் நம்ம ஊரு திருவிழா என்ற தலைப்பின் கீழ் கலைநிகழ்ச்சிகளை சாத்தூர் நகர்பகுதியான முக்ராந்தல் மற்றும் பெரியார் நகர் பூங்காவில் நடத்துமாறு அறிவுறுத்தப்பட்டது. அதன் பொருட்டு கலைநிகழ்ச்சி குழுவினற்கு ரூ.22,000/- இருக்கை வசதி, வண்டி வாடகைகள் இதர செலவினமாக ரூ.1420/-ஆக மொத்தம் ரூ.23,420/- தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்ட விதி-15-ன் கீழ் வழங்கியமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 38 /2024/பி1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.382, நாள்:31.01.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.5</u>

சாத்தூர் நகராட்சிக்கு உட்பட்ட மேலக்காந்தி நகர் ஆரம்ப பள்ளியில் புதிய கட்டிடம் அமைக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் பொருட்டு மிகவும் பழுதடைந்துள்ள பள்ளிக் கட்டிடத்திற்கு உறுதித்தன்மை சான்று (Stablity

Certificate) அரசு பொறியியல் கல்லூரியில் இருந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டதற்கு வண்டி வாடகை, கூலி மற்றும் சாப்பாடு செலவினம் மொத்தம் ரூ.34,100/- வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு:</u>

மேற்கண்ட பணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று செலவு செய்தமைக்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண் 807/2023/எம்1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.383, நாள்:31.01.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்</u>**.6

சாத்தூர் நகராட்சியில் UIDSSMT திட்டத்தின் கீழ் நகர்பகுதி முழுவதும் புதிய பாதாளச் சாக்கடை திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு பாதாளச் சாக்கடை இணைப்பு வழங்குவதற்கு அதற்குரிய இணைப்பு கட்டணம் மற்றும் மாதந்திர கட்டணம் நிர்ணயம் செய்து அதற்கான உபவிதிகள்,பொதுவிதிகள் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி சட்டம் 1998 மற்றும் திருத்திய விதிகள் 2023ன்படி வீட்டில் சாக்கடை இணைப்புகள் ஏற்படுத்தவும் மற்றும் கழிவுநீர் குழாய்கள் புதை சாக்கடைத் திட்டத்துடன் இணைப்புகள் கொடுப்பதற்கான நிபந்தனைகள் மற்றும் உபவிதிகளுக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.320 நாள்: 28.08.2023-ல் அனுமதி பெறப்பட்டு பொதுமக்களுக்கு அறியும் வகையில் ஆட்சேபணை மற்றும் ஆலோசனைகள் ஏதேனும் இருப்பின் அதனை 30 தினங்களுக்குள் எழுத்து பூர்வமாக சமர்ப்பிக்க கோரி 13.12.2023 தினசரி நாளிதழில் அறிவிக்கை செய்யப்பட்டது. மேற்கண்ட கட்டணங்கள், விதிகள் மற்றும் நிபந்தனைகள் குறித்து எவ்விதமான ஆட்சேபனை வரப்படததால் மன்றத்தால் அனுமதி வழங்கப்பட்ட கட்டணங்கள் விதிகள் மற்றும் நிபந்தனைகளை உறுதி செய்து அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2053/2006/ எம்1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.384, நாள்:31.01.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

(ஒம்) ச.குருசாமி,
நகர்மன்றத் தலைவர்,
சாத்தூர் நகராட்சி.

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்**

**சாத்தூர் நகராட்சி.**